1979 பிப்ரவரி 12] [திரு. சோ. அழகர்சாமி]

(ஆ) இக் கிராம விவசாயிகள் பல ஆண்டுகளாக சாகுபடி செய்து வந்த நிலங்களிலிருந்து வெளியேற்ற முயற்சி நடக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) நில உடைமை மற்றும் அனுபவம் குறித்து நிலச் சொந்தக்காரர்களுக்கும் குடியானவர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறில் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடரப் பெற்று முறையே சென்னை உயர்நீதி மன்றத்திலும் உரிய துணை மாவட்ட ஆட்சி தலைவரிடமும் வழக்குகள் உள்ளன.

துணைத் தாலுகா அலுவலகக் கட்டடங்கள்.

* வினா எண். 5—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) துணை தாலுகா அலுவலகங்களுக்காக சொந்தக் கட்டடம் கட்டும் உத்தேசம் உண்டா ?

(ஆ) இளையான்குடி துணை தாலுகா அலுவலகக் கட்டடம் கட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் தாலுகா, துணைத் தாலுகா கோட்டாட்சி அலுவலகங்களுக்கு புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1979-80 மொத்தத்திற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதிலேயே இளையான்குடி துணை தாலுகாவும் சேர்க்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இந்தப் பிரச்னை கிட்டதட்ட 6 வருஷமாக அங்கிருந்து கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் அடுத்த ஆண்டு கட்டப்படும் அடுத்த ஆண்டு கட்டப்படும் என்று சொல்லப்படுகிறது. உண்மை யிலேயே, இப்பொழுது சொல்லப்பட்ட மதிப்பிற்குரிய மந்திரி அவர்களுடைய இந்த வாக்குறுதி இந்த ஆண்டிலேயே நிறை வேற்றப்படுமா என்று உறுதியாகக் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து பல ஆண்டுகள் இருக்கின்றன என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். 5 ஆண்டுகள், அதற்குப் பிறகும் தேவைப்பட்டிருக்கிறது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டம் மட்டும் அல்ல, தமிழகத்திலே உள்ள

பல மாவட்டங்களில் இப்படி துணை தாலுகா, தாலுகா என்பதைப் பற்றியெல்லாம், வாடகைக் கட்டடங்களிலே இருப்பதைப் பற்றியெல்லாம் வருவாய் வாரியத்திலே பரிசீலனை செய்து, இருக்கிற நிதி நிலைக்கேற்ப முக்கியத்துவம் கொடுத்து 5 ஆண்டுகளிலே முடிப்பதற்கு இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

வரதட்சணை தடுப்புச் சட்டம்.

* வினா எண். 6—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வரதட்சணை தடைச் சட்டத்தின் கீழ் இந்த அரசு பதவி ஏற்றதற்குப் பிறகு எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

THE Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR : Prosecution has not been launched against any body so far.

திரு. என். பழனிவேல் : இந்த அரசு பதவியேற்றதற்குப் பின்னால் வரதட்சணை தடைச் சட்டத்தின்கீழ் எத்தனை பேர் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள், அதன் விவரம் என்ன என்று கேட்டிருந்தேன். அமைச்சரவர்கள் ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறார்கள். அது எனக்கு விளங்கவில்லை. ஆகவே, தயவு செய்து தமிழிலே சொல்ல வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : இது வரையும் ஒரு ப்ராசிக்யூஷன் கூட யார் மேலேயும் லாஞ்ச் பண்ணவில்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் இதுவரையில் யாரும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப் படவில்லையென்று குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் மட்டுமல்லாமல், பெரும்பாலான சமூகத்திலுள்ளவர்கள் பணமாகவோ, ஸ்கூட்டராகவோ (குறுக்கீடு) ஆடு, மாடாகவோ—நமது நிதியமைச்சரவர்கள் அறிந்திருக்கிறபடி—வரதட்சணை பெற்றிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு தனி பிரிவை உருவாக்க அரசு முன் வருமா ? எல்லோருக்குமே நன்றாகத் தெரிகிறது, வரதட்சணை வாங்கப்படுகிறது என்று. அமைச்சரவர்களுக்கும் தெரியும். அவர்களும் அறிவிக்கிறார்கள் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்று. நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் அலட்சியம் என்று நான் சொல்லவில்லை. இதைத் துரிதப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அரசு இனியேனும் தகுந்த முறையில் ஆவன செய்ய புது முறையைக் கையாளுமா என அறிய விரும்புகிறேன்.